இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில், "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்றார். (லூக்கா 1: 41-45)



# மணமுறிவுகளால் பாதிக்கப்படும் குழந்தைகள்

**வத்திக்கான்:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "அன்பின் மகிழ்வு" திருத்தூது அறிவுரை மடலில் மேய்ப்புப்பணி சார்ந்த ஒரு சில கண்ணோட்டங்கள் என்ற தலைப்பில் வழங்கியுள்ள 6-ம் பிரிவில் "திருமண முறிவு மற்றும் மணவிலக்கு" என்ற பகுதியில் 244 மற்றும் 245-ம் பத்திகளில் கூறியுள்ளவற்றை அவரது வார்த்தைகளில் அப்படியேத் தருகிறோம்:

மணமுறிவு குறித்த வழக்குகள் எளிதாக அணுகக்கூடியதாகவும் நேரத்தை இழுத் தடிக்காததாகவும் முடிந்தால் இலவசமாகவும் நடத்தப்படுவதற்கு வழிவகைச் செய்யப்படவேண்டியது குறித்து ஆயர் மாமன்றத் தந்தையர் பலர் வலியுறுத்தியுள்ளனர். இதன் நடைமுறை காலம் தாழ்த்திச் செல்லும்போது தம்பதியருக்கு மனவுளைச்சலையும் மனஅழுத்தத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த சிக்கலைக் கையாளும் எனது இரண்டு அண்மைய ஆவணங்கள் திருமண செல்லுபடியாகா நிலையை அறிவிப்பதற்கான நடைமுறைகளை எளிதாக்கியுள்ளன. ஒரு மேய்ப்பராகவும் தலைவராகவும் மறைமாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆயர் அவருடைய பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்ட விசுவாசிகளுக்கு நீதி வழங்குபவராக இருப்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த ஆவணங்களைச் செயல்படுத்துவது மறைமாவட்டங்களில் உள்ள ஆயர்களின் பொறுப்பாகும். சில வழக்குகளில் நேரடியாக தீர்வு வழங்க அழைக்கப்படும் ஆயர்கள் ஒவ்வொரு விடயத்திலும் விசுவாசிகள் நீதியை எளிதாக அணுகுவதை உறுதிசெய்ய வேண்டும். திருஅவை அதிகாரிகள் மற்றும் பொதுநிலை விசுவாசிகள் அடங்கிய போதிய ஊழியர்களைத் தயார் செய்வதும் இதில் அடங்கும். குடும்பங்களுக்குரிய மறைப்பணிகளோடு தொடர்புடைய தகவல் ஆலோசனை மற்றும் இடையீட்டாளரின் சேவைகள் பிரிந்திருக்கும் தம்பதியர் இருவருக்கும் அல்லது நெருக்கடியில் இருக்கும் தம்பதியினருக்கும் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். இந்த சேவைகளில் திருமண நடைமுறையின் ஆரம்ப விசாரணைகளை கருத்தில்கொண்டு தனிநபர்களைச் சந்திப்பதும் அடங்கும். (அன்பின் மகிழ்வு 244)



தம்பதியர் பிரிவதால் அப்பாவிகளாக பலியாகும் குழந்தைகளில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆயர் மாமன்றத் தந்தையர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எந்த ஒரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் குழந்தைகளின் நலன் குறித்த அக்கறைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். பிரிந்து வாழும் தம்பதியரை நோக்கி நான் இந்த விண்ணப்பத்தை விடுக்கிறேன் "எக்காரணத்தைக் கொண்டும் எச்சூழலிலும் உங்கள் குழந்தைகளை பிணையக் கைதிகளாக்காதீர்கள். நீங்கள் பிரிவதற்கு பல காரணங்கள் பிரச்சனைகள் இருக்கலாம் ஆனால் அதன் காரணமாக உங்கள் குழந்தைகள் ஏன் துயர்களை சுமக்கவேண்டும் அல்லது பிணையக்கைதியாக வேண்டும்? தாய் தந்தை பிரிந்திருக்கும் சூழலிலும் எப்போதும் தாய் தங்கள் தந்தையைக் குறித்து உயர்வாகப் பேசுவதையும் தந்தை தங்கள் தாயைக்குறித்து உயர்வாகப் பேசுவதையும் கேட்டுக்கொண்டு வளர வேண்டும்". ஒரு குழந்தையின் பாசத்தை வெல்லும் வழிமுறையாக அல்லது பழிவாங்கும் அல்லது தன் பக்க நியாயத்தை நிலைநாட்டும் முயற்சியாக கணவனோ மனைவியோ ஒருவர் மற்றவரை இழிவுபடுத்துவது பொறுப்பற்ற நிலையாகும். அவ்வாறு செய்வது குழந்தையின் உள்மன அமைதியை பாதிப்பது மட்டுமல்ல அது ஏற்படுத்தும் காயங்களை ஆற்றுவது கடினமானதாக இருக்கும். (அன்பின் மகிழ்வு 245)

# குழந்தை பாதுகாப்பு – பாதிக்கப்பட்டோர் பராமரிப்பு மையங்கள்

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் தொழில்முறை தரநிலை அலுவலகத்தின், குழந்தை பாதுகாப்பு செயலவை, கடந்த ஜூலை 31-ம் திகதி, அதன் இரண்டாவது குழந்தை பாதுகாப்பு மையம் (*Pusat Sokongan Mangsa*) குறித்த தொடர் சொற்பொழிவை நடத்தியது.

இந்த அமர்வின் நோக்கமானது, குழந்தைகள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் காவல்துறையில் தாக்கல் செய்யப்பட்டபின், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு என்ன நடக்கிறது என்பதைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதோடு, குழந்தைகள் மீது தவறான நடத்தை, குழந்தைகள் புறக்கணிப்பு மற்றும் இவ்விவகாரங்களில் விழிப்புணர்வு போன்றவற்றை எடுத்துரைப்பதன் வழி, குழந்தைகள் மீதான குற்றங்களைத் தடுக்க வழிவகைகள் காண்பதாகும்.

இச்சொற்பொழிவானது, நெகிரி செம்பிலான் மாநிலத்தின் காவல்துறையின் குற்றப்பிரிவைச் சேர்ந்த உளவியலாளர் தெபோரா ஹெர்மன் அவர்களால் நடத்தப்பட்டது. இச்சொற்பொழிவு நிகழ்வில் கலந்துகொண்டோரில், இந்த குழந்தைகள் பாதுகாப்பு மையத்தின் செயலவை உறுப்பினர் அருள்தந்தை வில்லியம் மைக்கல் மற்றும் கூச்சிங் மாமறைமாவட்டத்தின் பேராயர் சைமன் போ ஆகியோரும் அடங்குவர்.

தெபோரா ஹெர்மன் அவர்கள், தம் உரையில் குழந்தைகள் பாதுகாப்பு மையம் எப்போதும் பாதிக்கப்பட்டோரின் நண்பர்களாக இருந்து செயல்படுகிறது என்றும், அதன் அலுவலகமும் பாதிக்கப்பட்டோர் மனவுளைச்சலுக்கு என்றும் ஆளாகாதவாறு கவனித்துக் கொள்ளும் சுற்றுச் சூழலைக் கொண்டிருக்கிறது என்றார். மேலும், பாதிக்கப்பட்டவர்கள் அலுவலகத்திற்கு வர இயலாதச் சூழலில் நாங்கள் அவர்களது இருப்பிடம் தேடிச் சென்று உதவவும் தயாராக உள்ளோம் என்றார்.

பாதிக்கப்படோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் முன், பாதிக்கட்டப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட விபரங்கள் அனைத்தும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் எனும் உறுதி அளிக்கப்படும் என்றார்.

தொடர்ந்து, காவல்துறை துணை மேலதிகாரி ஓங் சின் லான் அவர்களின் உரை இடம்பெற்றது. இவர் 2003-ல் பாலியல் மற்றும் குழந்தைகள் புலனாய்வு பிரிவை ஏற்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.





மலேசியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் குழந்தைகள் பாதுகாப்பு மையம் உள்ளதாகவும் ஒவ்வொன்றுக்கும் ஒரு தேர்ச்சிப் பெற்ற குழந்தைகள் உளவியலாளர் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் இந்த அமர்வில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுவன் அல்லது சிறுமி முதலில் காவல்துறை அதிகாரி, வழக்கறிஞர் மற்றும் நீதிபதி முன்னும் கொண்டு வரப்பட்டு நடைபெற்ற உண்மை சம்பவம் குறித்து வாக்குமூலம் பதிவுச் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவை அனைத்தும் சீருடை அணியாத மேற்கூறப்பட்ட சிறப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு, பதிவுச் செய்யப் பட்ட வாக்குமூலம் மட்டுமே நீதிமன்றத்தில் மேல்விசாரணைக்கு ஒப்படைக்கப்படும் என்றார்.

-தமிழாக்கம்

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அலுவலக அறிக்கை

கடந்த ஆகஸ்டு 8-ம் திகதி நாட்டின் பிரதமர் டான் ஸ்ரீ டத்தோ முஹிடின் பின் ஹாஜி முகமது யாசின் அவர்கள் வெளியிட்ட அறிக்கையின்படி, ஆகஸ்டு 10-ம் திகதி தொடங்கி, கோவிட்-19-க்கான நிர்சயிக்கப்பபட்ட விதிமுறைகளில் இரு தடுப்பூசிகளை போட்டுக்கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தளர்வுகள் குறித்து மேற்கண்ட மாமறைமாவட்டம் வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு:

இக்காலக்கட்டத்தில் தொற்றுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு பொவதால், பின்வரும் செயல்பாடுகள் ஆகஸ்து 13 தொடங்கி நடப்பிலிருக்கும்.

1. அருளடையாளங்களின் தேவையை கருத்தில் கொண்டாலும், கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் அனைத்துப் பொதுத் திருப்பலிகளும் தொடர்ந்து அடுத்த அறிவிப்புவரை தடை செய்யப்பட்டுள்ளது.
2. பங்குகள் தொடர்ந்து இயங்கலை வாயிலாக இருப்பலிகள் கொண்டாடலாம். அருள்பணியாளரைத் தவிரத்து, 12 பேர் தன்னார்வ நிலையில் உதவி செய்யலாம். இவர்கள் இரு தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
3. 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள், சிறுவர் மற்றும் இளையோர் இன்னும் தடுப்பூசிகள் ஏற்காதக் காரணத்தால், இவர்களுக்கான அருள் அடையாளக் கொண்டாட்டங்கள் தற்காலிகமாகத் தடை செய்யப்படுள்ளது.
4. திருமண நிகழ்வுகள் மீண்டும் தொடங்கப்படலாம். இதில் மணமகன், மணமகள், அருள்பணியாளர், அவரது உதவியாளர்கள் தவிர்த்து, கலந்துகொள்ளும் வருகையாளர் எண்ணிக்கை 20 க்குள் இருக்க வேண்டும். அனைவரும் இரு தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
5. ஆலய வளாகத்திலுள்ள இறப்பு கூடாரங்கள் தொடர்ந்து செயல்படலாம். விழிப்பு இறைவேண்டல்கள் தவிக்கப்படுவதோடு, வருகையாளர்கள் 10 நிமிடங்களுக்குள் வெளியேற வேண்டும். ஒரு வேளையில் 5 பேருக்கு மட்டுமே அனுமதி உண்டு.
6. இறப்பு திருப்பலிகள் தொடரலாம். இதில் அருள்பணியாளர், உதவியாளர்கள் உட்பட 20 பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும். இவர்கள் இரு தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இறப்புக்கு வருபவர்கள் முன்பதிவு செய்ய வேண்டும்.

## அருள்பணி ஸ்தான் சுவாமி அவர்களின் போராட்டம் தொடரும்



இந்தியாவின் பழங்குடியின மக்களின் அதாவது "நீர், காடு மற்றும் நிலம்" ஆகிய மூன்று உரிமைகளுக்காகவும் தன் வாழ்நாளெல்லாம் அருள்பணி ஸ்தான் அவர்கள் உழைத்தார் என்பது உலகறிந்த உண்மை. அவர் மேற்கொண்ட போராட்டம் இனியும் தொடரும் என்று அருள்பணி ஜோதி அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

உலகின் 90க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் பழங்குடியினர் எண்ணிக்கையில் 47 கோடியே 60 இலட்சத்திற்கும் அதிகம் என்றும், இந்த எண்ணிக்கை உலக மக்கள் தொகையில் 6.2 விழுக்காட்டினர் என்றும் ஐ.நா. நிறுவனம் வெளியிட்ட புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

ஒருவரையும் பின்னே விட்டுவிடாமல் இருக்க, "பழங்குடியின மக்களும் புதிய சமுதாய ஒப்பந்தத்திற்கு அழைப்பும்" என்ற தலைப்பில் 2021-ம் ஆண்டின் பழங்குடியினர் உலக நாளை ஐ.நா. நிறுவனம் ஆகஸ்ட் 9 அன்று சிறப்பித்தது. இதனையொட்டி கருத்துரைத்த அருள்பணி ஜோதி அவர்கள், ஒவ்வொரு பழங்குடி மக்களும் கடவுளின் மக்கள் என்றும் மனதநேயத்திற்கும், அடிப்படை மனித உரிமைக்கும் உரியவர்கள் என்பதை வலியிறுத்தினார்.

# விவிலியப் பின்னணியில் அன்னை மரியாவின் விண்ணேற்பு

இன்று நாம் கொண்டாடும் 'அன்னை மரியாவின் விண்ணேற்பு' பெருவிழா கடந்த நூற்றாண்டில், 1950 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள் திருத்தந்தை பனிரெண்டாம் பையஸ் (பத்திநாதர்) அவர்களால் அங்கீரிக்கப்பட்டது என்பதை திருஅவையின் வரலாறு எண்பிக்கிறது. அவர் எழுதிய 'Magnificatissimus Deus' என்னும் திருமடல் வழியாக இக்கோட்பாட்டை அறிவித்தார். அவ்வேளையில், அவர் "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலும், தூய திருதூதர்களான பேதுரு, பவுலின் அதிகாரத்தினாலும், தமது தனிப்பட்ட அதிகாரத்தினாலும் அறிவித்து, கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட மறைகோட்பாடாக வரையறுப்பது என்னவென்றால், அமல உற்பவியாகிய கடவுளின் தாய் எப்பொழுதும் கன்னியான மரியா தனது மண்ணக வாழ்க்கைப் பயணத்தை முடித்தபின் விண்ணக மாட்சிக்கு ஆன்மாவோடும் உடலோடும் எடுத்துக்கொள்ளப்பட்டார்' என்று இக்கோட்பாட்டை உறுதிச் செய்தார்.

இக்கோட்பாட்டின் வழி கத்தோலிக்கத் திருஅவையானது, அன்னை மரியா கடவுளுக்கு எல்லா வகையிலும் உகந்த வாழ்க்கை வாழ்ந்ததால், தந்தையாம் கடவுள் அவருக்கு அளித்த மாபெரும் உன்னதக் கொடையாகும்.

ஒவ்வொரு மனிதனும் கடவுளால் படைக்கப்பட்டவன். அவர் மனிதனை உடலும் ஆன்மாவும் கொண்டவனாகப் படைத்தார். (தொநூ 2: 1-7) படைப்பின் போது மனிதன் கொண்ட உடலும் ஆன்மாவும் தூயதாகவே இருந்தது. பின்னர் மனிதன் தன்னுடைய பாவச் செயல்களால் கடவுள் அளித்த தூய்மை கொடையை இழந்தான். எனவே பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ 5:12) என்பது உறுதியானது. மனிதன் மரணத்தைத் தழுவினான். இது ஒரு பக்கம் இருந்தாலும் பாவக்கறையோடு இந்த மண்ணுலகத்தில் பிறந்தாலும் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்ததினால் மரணத்தைத் தழுவாமல் விண்ணகத்திற்கு இருவர் எடுத்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள் வேறுயாருமல்ல ஏனோக்கும் இறைவாக்கினர் எலியாவுமே ஆவார் (தொநூ 5:24, 2 அர 2:1). ஏனோக்கு கடவுளோடு நடந்தார். அதனால் அவர் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இறைவாக்கினர் எலியா கடவுளுக்கு உகந்த இறைவாக்கினராய் விளங்கினார். அதனால் அவரும் நெருப்புத் தேரோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆகவே, விவிலியப் பின்ணனியில் விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்படுவது சாத்தியமே. இதில் கேள்வி எழுப்ப மனிதனுக்கு ஞானம் போதாது.

அன்னை மரியாவைக் குறித்து சிந்தித்துப் பார்க்கும்போது அவர் ஓர் அமல உற்பவி. தாயின் கருவிலேயே பாவக்கறையில்லாமல் பிறந்தவர். எனவேதான், அவரை அமல உற்பவியாகப் படைத்த ஆண்டவர், அவரின் தூதரை உலகிற்று அனுப்பி, 'அருள்மிகப் பெற்றவளே' என மாட்சிப் படுத்தினார். (லூக் 1:28). அது மட்டுமல்லாமல் ஆண்டவர் இயேசுவையே தன்னுடைய உதிரத்தில் தாங்கிடும் பேறுபெற்றார். அவர் வாழ்நாள் முழுவதும் இறைவனின் திருவுளத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். இத்தகைய பேற்றினால் மரியாள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என நாம் உறுதியாகச் சொல்லலாம். நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கூறுவார் "நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்" (யோவா 12:26). அன்னை மரியா தலை சிறந்த சீடராக வாழ்ந்ததினால் அவர் ஆண்டவராகிய இயேசு இருக்கும் விண்ணக வீட்டில் இருப்பார் என நாம் உறுதியாக அறிக்கையிட கடமைப்பட்டுள்ளோம்.

தமது மறுமையை முன் குறித்தே அறிந்திருந்த அன்னை மரியா, "வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்." என்று பாடினார் (லூக்கா 1: 49-50). அன்னை மரியை அன்னையாக பெற்ற நமக்கும் அவர் மீட்பின் தாயாகவும் நிலைவாழ்வுக்குப் பரிந்துரைப்பவராகவும் விண்ணில் அமந்துள்ளார்.

-ஆர்.கே.

**ஒவ்வொரு நாளும் ஒருமுறையாவது குடும்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து உணவருந்துதலும் அவ்வுணவை ஆசீர்வதிக்க இயேசுவை அழைத்தலும் இன்றியமையாதவை.**

# நமது முழு அர்ப்பணமே ஆண்டவரின் அக்களிப்பு

இறையன்னை மரியாவின் விண்ணேற்பை இன்று நாம் கொண்டாடுகிறோம். மரியாவின் விண்ணேற்பு நமக்கெல்லாம் ஒரு விடிவெள்ளியாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது. அவரது விண்ணேற்பானது, கடவுளின் திருவுளத்திற்கு அவரது முழுமையான கீழ்ப்படிதல்தான் ஆதாரம். அன்னை மரியாவின் விண்ணேற்புக்கு நான்கு கோட்பாடுகள் காரணங்களாக உள்ளன. முதலில் மரியா பாவக்கறை இல்லாமல் பிறந்தவர். ஆண்டவரைத் தாங்கிய கிண்ணம் மாசுமருவற்று இருக்க வேண்டும்.

அதனால்தான் 1854-ம் ஆண்டு அமல உற்பவி என மரியா அறிவிக்கப்பட்டார். இரண்டாவது, அவர் இறைவனின் தாய். அவர் உடலிலும் ஆன்மாவிலும் அவரது மகனைப் போல் இருக்க வேண்டும். மூன்றாவது அவர் என்றும் கன்னிகையாக இருந்தார். நான்காவது புவியில் தமது மகனின் இறையரசு பணியில் மரியா முழுமையாக பங்கு கொண்டார்.

உண்மையில் மரியாவின் பெருமை கடவுள் முன்னிலையில் அர்ப்பணமாக இருந்தது. கபிரியேல் வானதூதரின் வார்த்தைக்கு "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்.1:38) எனக் கூறினார். தன்னையே ஆண்டவரின் அடிமையாக அர்ப்பணித்தார். ஆண்டவருக்கு அர்ப்பணம் என்பது எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும் 'தேனிலவு' காலம் என்பதில்லை. ஆனால் கடவுளுக்கு இன்னும் அதிகமதிகமாக கொடுப்பதாகும். மோசே சட்டப்படி குழந்தை இயேசுவை கோவிலில் அர்ப்பணிக்கும் போது "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" (லூக்.2:35) என்று சிமியோம் வாக்குரைத்ததும் இயேசு பன்னிரண்டு வயதில் காணாமற்போய் அவரைத் தேடி அலைந்ததையும் சீர்தூக்கிப் பார்த்தால் அர்ப்பணம் என்பது தற்காலிகம் அல்ல என்பது புரியும். கடவுளுக்கு முழுமையாக அர்ப்பணித்ததால் இன்னும் அதிகமதிகமாக கொடுத்ததால் கடவுளின் உடனிருப்பு மரியாவில் நிழலாடியது. அவரது அர்ப்பணிப்பு 'அருள்மிகப் பெற்றவர்' என்ற நிலைக்கு இட்டு இயல்பாகவே ஆண்டவரோடு இணைந்து வாழும் நிலைவாழ்வுக்கு உயர்த்தியது (உரோ.6:23).

சில சமயத்தில் கடவுளாக செயல்படும் போக்கு நம் எல்லாரிடமும் இருக்கிறது. நமது வாழ்க்கையைக் கடவுள் கையில் ஒப்படைக்க விட்டுவிடுவதில்லை. நாமே நமக்குக் கடவுளாக மாறிவிடுகிறோம். கடவுளிடம் நமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதில்லை. கடவுளிடம் இரு கையையும் நீட்டுவதில்லை. அப்படியே நீட்டினாலும் பலனை எதிர்ப்பார்த்து நீட்டுகிறோம். முழுமையாக அர்ப்பணித்து வெறுங்கையை நீட்டினால் மட்டுமே தம்மையே கடவுள் தருவார். சிலுவையில் இருக்கரம் விரித்து நமக்காக உயிர்நீத்த இயேசுவைச் சார்ந்திருக்கும் நாம் அனைவரும் எழுப்பப்படுவோம் என 2-ம் வாசகத்தில் புனித பவுல் கூறுகிறார் (1கொரி.15:20).

கடவுளுக்கு முழுமையாக அர்ப்பணம் செய்வதற்கு அன்னை மரியா நமக்கோர் அடையாளம் என முதல் வாசகத்தில் புனித யோவான் காட்டுகிறார் (திவெ.12:1). அன்னை மரியாவின் நம்பிக்கை கடவுளின் செயல்களை அடையாளம் காண உதவியது. மரியா மூலமாக அனைவருக்கும் மீட்பைக் கொண்டு வர அவரது முழு அர்ப்பணிப்பு கடவுளுக்கு வழிவகுத்தது. இறையன்னை மரியா போல் கடவுளுக்கு நம்மையே அர்ப்பணம் செய்வதற்கும் கடவுளின் உடனிருப்பால் நிரப்பப்படுவதற்கும் ஒவ்வொரு வினாடியும் அன்னை மரியாவைப் போல் கடவுளின் திட்டத்திற்கு ஒத்துழைப்போம்.

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது (லூக்.1:47)

*அந்தோணி இன்னாசி, ஸ்ரீகெம்பாஙான்*

**புனித கன்னி மரியா விண்ணேற்பு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | திவெ 11:19a;12:1-6, 10ab |
| தி.பாடல்: | 45: 9. 10-11. 15 |
| 2ம் வாசகம்: | 1 கொரி 15: 20-26 |
| நற்செய்தி: | லூக்கா 1: 39-56 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 4**